(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 118.]

# பாராளுமன்றம்

# ஒழுங்குப் பத்திரம்

## 2011 ஓகத்து 26, வெள்ளிக்கிழமை, பி. ப. 1.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0594/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த எட்டு வருடங்களில்,

(i) மூலதனக் கடன் கொடுப்பனவிற்காகவும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான வட்டிக்காகவும் செலவு செய்யப்பட்ட தொகையையும்,

(ii) அரசாங்க சேவையில் ஏற்பட்ட ரூபா 25 மில்லியனுக்கு மேற்பட்ட வேறு ஏதேனும் மீண்டும் வரும் செலவினத்தின் பெயரையும் தொகையையும்

வருடவாரியாக அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1109/ '11

2.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்ட தேசியப் பாடசாலைகளில் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவ / மாணவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு மாணவருக்கு அல்லது மாணவிக்கு வருடாந்தம் கிடைத்துள்ள மாணவர் உதவித் தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1134/ '11

3.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இற்றைவரை வெள்ளப்பெருக்கு காரணமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை ஏக்கர் வயற்காணிகள் நாசமடைந்ததென்பதை தனித்தனியாகவும்;

(ii) மேற்படி அழிவு காரணமாக ஏற்பட்டுள்ள நட்டம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற்காணிகளுக்கு நேர்ந்த அழிவு சம்பந்தமாக ஏதேனும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(v) சேதமடைந்த ஓர் ஏக்கர் வயற்காணிக்கு வழங்கப்படும் நிவாரணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1250/ '11

4.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1609/ '11

5.

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாலி பீடத்தில் நடத்தப்படும் பட்டப் படிப்புக்கான பாடநெறிகள் யாவை என்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பாடநெறிக்காகவும் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) சர்வதேச பல்கலைக்கழக வகைப்படுத்தலுக்கு அமைய 2010 ஆம் ஆண்டில் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் கட்புல, அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகம் ஆகியன எந்த இடத்தில் இருந்தன என்பதையும்

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) ஸ்ரீ பாலி பீடத்தை கட்புல, அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்தத் திட்டத்தை சபையில் சமர்ப்பிப்பீர்களா என்பதையும்;

(iii) இதன் முலம் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(v) இன்றேல் அந்த இணைப்பு திட்டமிடப்படாத வகையில் மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) தற்போது கட்புல, அரங்கேற்றக் கலை பல்கலைக்கழகம் அமைந்திருக்கும் இடத்தை வேறு அரச அல்லது தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1063/ '11

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சீனா, அமெரிக்கா, இந்தியா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச கூட்டுறவுக்கான ஜப்பானிய வங்கி மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகளினாலும் நிறுவனங்களினாலும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்பட்ட கடன்கள் அல்லது மானியங்களின் காலப்பகுதியின் முடிவின் போது செலுத்தப்படவுள்ள மொத்தத் தொகையினை அமெரிக்க டொலர்களிலும்;

(ii) இக்கடன்களின் சராசரி மீளச் செலுத்தல் கால அளவினை நாடுகள் அல்லது நிறுவனங்கள்வாரியாக வெவ்வேறாகவும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1110/ '11

7.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாவட்டத்திற்குரிய ஜயவர்த்தனபுர வலயக் கல்விக் காரியாலயத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற சுபோதி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவிகள் ஆறாம் தரத்திற்காக மாலம்பே இராகுல மகளிர் கல்லூரியில் அனுமதிக்கப்படுகின்றனர் என்பதையும்;

(ii) இப்பாடசாலையின் அதிபர் ஆறாம் தரத்திற்கு பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளும் போது வசதிக்கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்களாக ஒரு பிள்ளையிடமிருந்து ரூபா 3162.00 தொகையை பற்றுச் சீட்டுகள் விநியோகித்து அறவிடுகின்றார் என்பதையும்;

(iii) மேற்படி தொகைக்கு மேலதிகமாக பற்றுச் சீட்டுகளை விநியோகிக்காமல் மேசைகள், கதிரைகள் என்பவற்றுக்கான செலவெனக் குறிப்பிட்டு ரூபா ஆறாயிரம் அறவிடுகின்றார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாலம்பே இராகுல மகளிர் கல்லூரியின் அதிபருக்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணம் அறவிடுவதற்கான அதிகாரம் உள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், இப்பணம் அறவிடுதல் தொடர்பாக ஒரு புலனாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1135/ '11

8.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசின் கைவசம் உள்ள விதை நெல்லின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விதை நெல் கையிருப்பைக் கொண்டு பயிரிடக்கூடிய வயற் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iii) இயற்கை அனர்த்தமொன்றின் போது பயன்படுத்துவற்கு அரசாங்கத்தின் கைவசம் விதை நெல் ஒதுக்கம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(vi) தற்போதுள்ள வயற்காணிகளில் பயிரிடுவதற்கு அந்த விதை நெல் ஒதுக்கம் போதுமா என்பதையும்;

(v) இல்லையெனில் இதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(vi) போதியளவு விதை நெல் அரசின் கைவசம் இல்லாமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், என்?

1251/ '11

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1610/ '11

10\.
கௌரவ அஜித் பீ. பெரேரா,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாணந்துறை நீதவானின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள பாணந்துறை கரையோரப் பூங்காவுக்கு அருகாமையில் காணப்பட்ட காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(ii) குறித்த காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகபூர்வ இல்லம் 2004.12.26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தால் சேதமடைந்ததா என்பதையும்;

(iv) சேதமடைந்த உத்தியோகபூர்வ இல்லத்தையும் சுற்று மதிலையும் திருத்தியமைக்கச் செலவிட்ட மொத்த பணத் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாணந்துறை நீதவானின் உத்தியோகபூர்வ இல்லமும் அது அமைந்துள்ள காணியும் தனியார் நிறுவனமொன்றுக்கு உணவகமொன்றை நடத்திச் செல்லும் பொருட்டு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) பாணந்துறை நீதவானுக்கு தற்போது உத்தியோகபூர்வ இல்லமொன்று இல்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி குத்தகை வழங்கலை சிபாரிசு செய்தவர்கள் மற்றும் அதற்கான அங்கீகாரத்தை அளித்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) அதனுடன் தொடர்புடைய குத்தகை உடன்படிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி ஆதனத்தின் உரித்துடைமை கைமாற்றப்பட்டபோது முறைகேடு மற்றும் அல்லது ஊழல் நடைபெற்றுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1069// '11

11\.
கௌரவ.ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உதவி வழங்கும் துறைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உதவி வழங்கப்படும் துறைகளுள் அடையாளம் காணப்பட்ட ஐந்து துறைகள் தொடர்பாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஏற்பட்ட மொத்தச் செலவினத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையையும்;

(ii) பணியாளர்கள் உற்பத்தி வீச்சினடிப்படையிலா அல்லது உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளினடிப்படையிலா அமர்த்தப்பட்டுள்ளனர் அல்லது அவர்கள் சாத்தியப்படும் போதெல்லாம் ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் முகமாக ஓர் குழாத்தில் உள்ளனரா என்பதையும்;

(iii) ஏற்றுமதி அபிவிருத்திச் சபையிலுள்ள நிபுணர்களின் பெயர்களையும்;

(iv) அவர்கள் நிபுணத்துவம் பெற்றுள்ள துறைகளையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1111/ '11

12.

கௌரவ புத்திக பத்திரண,— நிதி, திட்டதிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டில் இலங்கை வங்கிக்கு வங்கி முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் முகாமைத்துவ உதவியாளர் நியமனங்கள் தற்போது வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) பரீட்சையின் பெறுபேறுகளின்படி இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லையெனில், நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

(iv) மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கான தகைமையை பெறுவதற்குரிய ஆகக் குறைந்த புள்ளி மட்டம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1136/ '11

13.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த வயது முதிர்ந்தவர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற புண்ணியச் சம்பளத்தைப் பெறுகின்ற வயது முதிர்ந்தோரின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) புண்ணியச் சம்பளம் பெறுகின்ற ஒருவருக்கு மாதமொன்றுக்காக வழங்கப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை இறுதியாகத் திருத்தப்பட்ட வருடம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய பொருளாதார நிலைமையின் படி புண்ணியச் சம்பளமாக கிடைக்கின்ற இப் பணத் தொகையானது எந்த வகையிலும் போதியதாயில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில் தற்போதைய பொருளாதார நிலைமைக்கேற்ப மேற்படி பணத் தொகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அதிகரிக்கப்படும் புண்ணியச் சம்பளத்தின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1252/ '11

14.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, — வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1611/'11

15.

கௌரவ அஜித் பீ.பெரேரா,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 ஆம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியை அம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விளையாட்டு விழாவை நடத்துவதற்காக அரசாங்கம் மேற்கொள்ள எதிர்பார்க்கும் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## அனுதாபப் பிரேரணைகள்

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எல். த எஸ்.ஏ. குணசேகர

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (திருமதி) சோமகுமாரி தென்னக்கோன்

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர்.எம். தர்மதாச பண்டா

4.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விமலசிறி த மெல்

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— கரையோரம் பேணல் (திருத்தம்),— 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் சட்டத்தைத் திருத்துவதற்கும்; 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் காணி மீட்டல், அபிவிருத்திக் கூட்டுத்தாபனச் சட்டத்தினதும் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினதும் குறித்த சில ஏற்பாடுகளைத் திருத்துவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை நேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1

சுற்றாடல் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 (2) (ஏ) ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2009 நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 1627/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.08.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 2.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 3.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 4.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 5.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 7.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 10.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 11.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 12.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 13.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 14.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

பலன புத்தர் சிலை அமைப்புச் சபை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.